காணொலிக் காட்சி வாயிலாக – நாளை

மாவட்டச் செயலாளர்கள் - தொகுதிப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மண்டலப் பொறுப்பாளர் – அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் அண்மையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும், அதனை அடுத்து நடைபெற்ற மண்டல பொறுப்பாளர்கள் கூட்டத்திலும் அறிவுறுத்தியபடி, வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் நாம் வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கின் அடிப்படையில், உடனடியாக ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள BLO, BLA2 மற்றும் BLC விவரங்களை சரிபார்க்கும் பணி மாவட்டக் கழகச் செயலாளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விவரங்கள் கள அளவில் சரிபார்க்கப்பட்டு தலைமைக் கழகத்திற்கு வரும் 10/09/25 அன்று ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஒட்டி மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களில் ஆற்ற வேண்டியுள்ள பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நாளை 07/09/2025 ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணியளவில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் தங்கம் தென்னரசு
மண்டலப் பொறுப்பாளர்
செயலாளர், விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க.

மாணவர்களின் உயர்வுக்காகப் பாடுபடும்

நல்லாசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் தின வாழ்த்துகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, செப். 6-

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், "மாணவர்களின் உயர்வுக் காகப் பாடுபடும் நல்லாசிரியப் பெருமக்கள் அனை வருக்கும் எனது ஆசிரியர் தின வாழ்த்துகள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பெற்றோர்கள் ஆசிரியர்களை நம்பிப் பிள்ளைகளை ஒப்படைக்கிறார்கள்! பிள்ளைகள் பெற்றோரை விட ஆசிரியர்கள் சொல்வதையே அதிகம் நம்புகிறார்கள்...

அந்த மாணவர்களுக்குத் தமிழை, அறத்தை, அரசியலை, அறிவியலை என அனைத்தையும் கற்பித்து அவர்களின் உயர்வுக் காகப் பாடுபடும் நல்லாசிரியப்பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் தின நல்வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள், அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முதல் கூடுதலாக 2,500 கலைஞர்களுக்கு மாதம் 3,000 ரூபாய் நிதியுதவி அளிக்கும் ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 10 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி ஆணைகளை நேற்று (5.9.2025) வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர். க.மணிவாசன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் வாகை.சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் விஜயா தாயன்பன், அருங்காட்சியங்கள் துறை ஆணையர் மற்றும் கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் கவிதாராமு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2025 – 2026 ஆம் ஆண்டிற்கான யோகா – இயற்கை மருத்துவம்

சித்தா - ஆயுர்வேதா - யுனானி மருத்துவத்திற்கான பட்டப்படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியல்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, செப்.6-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (5.09.2025) சென்னை, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், 2025-26 கல்வி ஆண்டிற்கான யோகா மற்றும் இயற்கை மருத்துவம், சித்தா, ஆயுர்வேதா, யுனானி போன்ற மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலை வெளியிட்டு, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம் சார்பில் நடைபெறவுள்ள "எதிர்கால மருத்துவம் 2.0" மாநாட்டிற்கான கையேடு மற்றும் வலைதளத்தினை வெளியிட்டார்.

பிறகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தரவரிசைப் பட்டியல்

2025-26 ஆம் ஆண்டிற்கான ஆயுஷ் மருத்துவப் பட்டப் படிப்புகளான BSMS, BUMS, BHMS மற்றும் BNYS போன்ற பட்டப் படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியல் மற்றும் 7.5 % அரசு பள்ளி மாணவர்களுக்கான உள் ஒதுக்கீடு பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே 17.07.2025 முதல் 08.08.2025 வரை BNYS பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டது. அதேபோல் 2025-26ஆம் கல்வியாண்டிற்கான ஆயுஷ் மருத்துவ பட்டப் படிப்புகளான BSMS, BAMS, BUMS, BHMS போன்ற பட்டப் படிப்புகளு 24.07.2025 அன்று வெளியிடப்பட்டு ஆன்லைன் வழியாக விண்ணப்பங்கள் பெறப்பட்டது. 24.07.2025 முதல் 14.08.2025 வரை பெறப்பட்ட விண்ணப்பங்களு க்கான தரவரிசைப் பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது. BNYS பட்டப்படிப்புகளுக்கு மட்டும் நீட் தேர்வு இல்லை. மற்ற BSMS, BAMS, BUMS, BHMS ஆகிய பட்டப் படிப்புகளுக்கு நீட் தேர்வு உண்டு. தமிழ்நாட்டில் சித்தா மருத்துவத்திற்கு என்று இருக்கின்ற அரசுக் கல்லூரிகளின் எண்ணிக்கை 2. அதற்குரிய இடங்கள் 160. சுயநிதி கல்லூரிகளின் எண்ணிக்கை 13. இடங்கள் 790. ஆயுர்வேதா அரசு மருத்துவக்கல்லூரி 1, இடங்கள் 56. சுயநிதிக் கல்லூரிகள் 5, இடங்கள் 270. யுனானி அரசு மருத்துவக்கல்லூரி 1, 45 இடங்கள். ஓமியோபதி அரசு மருத்துவக்கல்லூரி 1, இடங்கள் 50. சுயநிதி 11, இடங்கள் 900. யோகா அரசுக் கல்லூரிகள் 2, இடங்கள் 160. சுயநிதி 19, இடங்கள் 1800. ஆக மொத்தம் ஆயுஷ் மருத்துவத்திற்கான மொத்த அரசு மருத்துவக்கல்லூரிகள் 7, இடங்கள் 471. சுயநிதிக்கல்லூரிகள் 48, இடங்கள் 3760. ஒட்டுமொத்தமாக அரசு இடங்கள் 471, சுயநிதிக் கல்லூரி இடங்கள் 3760க்கும் சேர்த்து மொத்தம் 4231 இடங்களுக்கு தரவரிசைப் பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

அரசுக்கு ஒப்பளிக்க செய்யப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 2797. இதில் தகுதிக்குரிய விண்ணப்பங்களாக ஏற்கப்பட்டவை 2750, நிர்வாக ஒதுக்கீடு இடங்களுக்காக பெற ப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 1461, தகுதியான விண்ணப்பங்கள் 1445. சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு 08.09.2025 அன்று காலை தொடங்குகிறது. பொதுப் பிரிவினரு க்கான கலந்தாய்வு இணையவழியில் கல்லூரி விருப்பத் தேர்வு செய்வதற்கான காலம் 08.09.2025 காலை 10 மணி முதல் 11.09.2025 மாலை 05 மணி வரை. நிர்வாக ஒதுக்கீட்டிற்கான இணையவழி கல்லூரி விருப்பத் தேர்வு செய்வதற்கான காலம் வலைத்தளத்தில் பின்னர் வெளியிடப்படும். BNYS அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் முதல் இரண்டு இடங்களை பிடித்த மாணவர்களின் விவரம் 1. செ. பூமிகா, அரியலூர் மாவட்டம் 198.50 மதிப்பெண்கள் 2. ஆ.பிரதோசியா, தஞ்சாவூர் மாவட்டம், 198.50 மதிப் பெண்கள் பெற்றிருக்கிறார். BNYS நிர்வாக ஒதுக்கீட்டிற்கான விண்ணப்பித்து முதல் இரண்டு இடங்களை பெற்றவர்கள் 1. ஆ.பிரதோசியா, தஞ்சாவூர் மாவட்டம், 198.50 மதிப்பெண்கள் 2. க.ஆர்த்தி, தென்காசி மாவட்டம், 197 மதிப்பெண்கள். அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 4500. தகுதியான விண்ணப்பங்கள் 4371. அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கான 7.5% இடஒதுக்கீட்டிற்கு பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 1015. தகுதியான விண்

ணப்பங்கள் 958. அகில இந்திய அளவில் பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 1460. தகுதியான விண்ணப்பங்கள் 1430. நிர்வாக ஒதுக்கீட்டிற்காக பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 1942, தகுதியான விண்ணப்பங்கள் 1860. அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் நீட் தேர்வு அடிப்படையில் முதல் இரண்டு இடங்களை பிடித்த மாணவர்கள் 1.டி. எஸ்.பிரகதி, கன்னியாகுமரி மாவட்டம், 520 மதிப்பெண்கள், 2. இனிய சுதர்சன், மயிலாடுதுறை மாவட்டம், 512 மதிப்பெண். அகில இந்திய இடஒதுக்கீடு விண்ணப்பித் தவர்களில் முதல் இரண்டு இடங்களை பிடித்தவர்கள் 1. இனிய சுதர்சன், மயிலாடுதுறை மாவட்டம், 512 மதிப் பெண், 2. ப.அனிதா, திருவள்ளூர் மாவட்டம், 504 மதிப்பெண். நிர்வாக இடஒதுக்கீடு கோரி விண்ண ப்பித் தவர்களில் முதல் இரண்டு இடங்களை பிடித்தவர்கள் 1. அக்சயா, கடலூர் மாவட்டம், 501 மதிப்பெண்கள், 2.ம.உசேன், சென்னை, 497 மதிப்பெண்கள். தமிழ் நாட்டில் உள்ள அகில இந்திய ஒதுக்கீட்டிற்கான இடங்கள் AACCS என்று சொல்லக்கூடிய அகில இந்திய ஆயுஷ் கலந்தாய்வு குழு மூலம் நடத்தப்படவிருக்கிறது. இந்த கலந்தாய்வின் இரண்டாவது சுற்று முடிந்த பிறகு தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்கள் பட்டியலில் மாநில கலந்தாய்வு குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டு அந்தப் பெயர்கள் மாநில தரவரிசைப் பட்டியலில் நீக்கப்பட்டு அதன் பின் மாநில கலந்தாய்வு நடைபெறவிருக்கிறது. அந்த வகையில் கலந்தாய்வு வரும் 08.9.2025 அன்று காலை முதல் தொடங்கப்படுகிறது.

"நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்" தொடர்பான கேள்விக்கு

நாளை தமிழ்நாட்டில் 35 இடங்களில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் நடத்தப்படவிருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள ஒட்டுமொத்த வருவாய் மாவட்டங்கள் 38, முதல் முகாம் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது. இரண்டாவது முகாம் சென்னை, நீலகிரி நீங்கலாக 36 மாவட்டங்களில் நடத்தப்பட்டது. மூன்றாவதாக 38 இடங்களில் முகாம் நடத்தப்பட்டது. கடந்த வாரம் 38 மாவட்டங்களில் நடத்தப்பட்டது. இந்த வாரம் நாளை 35 இடங்களில் நடத்தப்படவிருக்கிறது. இதில் சென்னையில் 15 முகாம்கள். இந்த முகாம்கள் வரும் ஜனவரி மாதம் வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. நீலகிரியில் ஒன்றியத்திற்கு 3 என்கின்ற வகையில் வாரம் விட்டு வாரம் முகாம் நடத்தப்படவிருக்கிறது. பெரம்பலூர் சிறிய மாவட்டம் என்பதால் அங்கேயும் வாரம் விட்டு வாரம் நடத்தப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறும் முகாமில் நான் கலந்து கொள்ள விருக்கிறேன். அங்கு 18க்கும் மேற்பட்ட புதிய மருத்துவத்துறை கட்டிடங்கள் திறந்து வைக்க உள்ளோம். 10க்கும் மேற்பட்ட கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்ட உள்ளோம். இந்த முகாமில் 17 சிறப்பு துறைகள் பங்கேற்கின்றது. முழு உடற் பரிசோதனை நடத்தப்படவிருக்கிறது. தனியார் மருத்துவ மனைகளில் ரூ.20,000/- வரை செலவாகும். ஒரு ரூபாய் கூட செலவில்லாமல் இந்த முகாமில் ஒட்டு மொத்த பரிசோதனைகளும் கட்டணமின்றி செய்துக் கொள்ளலாம். இதுவரை 150 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. மொத்தம் 1256 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள 388 ஒன்றியங்களிலும் ஒரு ஒன்றியத்திற்கு 3 என்கின்ற வகையில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் தலா 5 என்கின்ற வகையிலும், 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 4 என்கின்ற வகையிலும், சென்னையில் 15 முகாம்கள் என 1256 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. இந்த முகாமில் இது வரை பயன்பெற்றவர்கள் 2,06,520 பேர். மொத்த உடற்திறன் கூறு சேகரிக்கப்பட்டவர்கள் 1,63,258 பேர், இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டது 1,38,495 இசிஜி பயனாளிகள் 90,662 இரத்த மாதிரிகள் முடிவுகள் வழங்கப்பட்டது 1,38,000 முடிவுகள் பெற்றுக் கொண்டவர்கள் 1,04,772, இப்படி மிகச் சிறந்த வகையில் முழு உடற் பரிசோதனை முகாம்களாக நடைபெற்று வருகிறது.

ரேபிஸ் வைரஸ் தொடர்பான கேள்விக்கு

இந்த அரசுப் பொறுப் பேற்றபிறகுதான் முதன்முறையாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்புக்கடி, நாய்க் கடிகளுக்கான மருந்து இந்த மருத்துவமனைகளில் என்பது இல்லை. கிராமங்களில் பொதுவாக பாம்புக்கடி மற்றும் நாய்க்கடி பாதிப்புகளுக்கு உள்ளாகும் போது வட்டார மருத்துவமனை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தான் வர வேண்டும். 2256 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாம்புக்கடிக்கான ASV என்கின்ற மருந்தும், நாய்க்கடிக்கு ARV என்கின்ற மருந்தும் அனைத்து மருத்துவமனைகளிலும் இருப்பு வைக்க உத்தரவிட்டதைத் தொடர்ந்து அனைத்து மருத்துவமனைகளிலும் இந்த மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நான் பல்வேறு மாவட்டங்களுக்கு ஆய்வு செல்லும் போதெல்லாம் நான் கேட்கும் முதல் கேள்வி ASV, ARV மருந்துகளின் இருப்பு எத்தனை இருக்கிறது என்றும் எத்தனை பேர் பயன்பெற்றிருக்கிறார்கள் என்றுதான் கேட்கப்படும். அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மருந்துகளின் இருப்பு 100% உறுதி செய்யப்படுகிறது.

மேலும் நாய்களின் பெருக்கத்தினை குறைப்பது, நாய்களினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களுடன் கூட்டம் நடத்தப்பட்டு, நாய்களினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கும், குறைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். பொதுமக்களை இந்த பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திரு மதி.விஜயலட்சுமி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ், இணை இயக்குநர் மரு. மணவாளன், தேர்வுக்குழு செயலாளர் மரு.கரோலின் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (06.09.2025 - சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ச. இனியரசு தலைமையிலும், மாவட்ட துணைச் செயலாளர்கள் க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள் - கழக அணிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: (1.) கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளிநாடு சென்று தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து வெற்றியுடன் 8.9.2025 அன்று சென்னை திரும்பும் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து

(2) காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரத்திற்கு 09.09.2025 - செவ்வாய்க்கிழமை அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை குறித்து.

(3) முப்பெரும் விழா (4) கழக ஆக்கப்பணிகள்.

க.சுந்தர் எம்.எல்.ஏ.
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர், வில்லிவாக்கம் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர்- அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர், வில்லிவாக்கம் மாவட்ட நிர்வாகிகள் , பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (06-09-2025 சனிக்கிழமை) மதியம் 1.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, பிரிக்ளின் சாலை, எஸ்.ஆர் மஹாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர், வில்லிவாக்கம் தொகுதி களுக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள்-முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

புலவர் க.முருகையன்
செப்டம்பர் 6 (1997)



இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கையில் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழகத்தில் பணியாற்றி, பின்னர் கழகம் துவங்கியதும் தன்னை இணைந்துக்கொண்டு, ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே கழகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களுடன் கல்லக்குடி போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

1967இல் திருவையாறு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, திறம்பட பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.